

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2053 | ஏப்ரல் 28, 2022 | புரட்சி 21 | முழக்கம் 15 | விலை: ரூ.3.00

## நமக்கான அடையாளம் ‘திராவிட மாடல்’

# கழகப் பரப்புரை இயக்கங்கள் தொடங்கின

*நமக்கான அடையாளம் ‘திராவிட மாடல்’ என்ற முழக்கத்தை முன் வைத்து திராவிடர் விடுதலைக் கழகத்தின் பரப்புரை இயக்கங்கள் தொடங்கி எழுச்சி நடைபோட்டு வருகின்றது.*

**சென்னை : முதல் நாள் தெருமுனைக் கூட்டம் :** மாநில உரிமையைப் பறிக்கும், கல்வி உரிமையைத் தடுக்கும், மதவெறியைத் திணிக்கும் பாஜகவை எதிர்த்து, தமிழ்நாடு அரசின் ‘திராவிட மாடல்’-அய் ஆதரித்து, நமக்கான அடையாளம் “திராவிட மாடல்” மண்டல மாநாட்டை விளக்கி, தெருமுனைப் பிரச்சாரம், சென்னை இராயப்பேட்டை, திருவல்லிக்கேணி பகுதிகளில், (19.04.2022 மாலை 5:30 மணிக்கு மீர்சாகிப் பேட்டை மார்கெட் பகுதியில் 119 ஆவது வட்ட கவுன்சிலர் திமுக கமலா செழியன் தொடங்கி வைத்தார்.

அடுத்ததாக அய்ஸ் ஹவுஸ் ஷேக் தாவூத் தெரு, இறுதியாக அய்ஸ் ஹவுஸ் கிருஷ்ணாம்பேட்டை பள்ளி ஆகிய மூன்று இடங்களில் தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்றன.

தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், மாவட்ட செயலாளர் உமாபதி, பிரகாசு, ஜெய பிரகாசு, தேன்மொழி ஆகியோர் மக்களிடம் ‘திராவிட மாடல்’-அய் ஏன் ஆதரிக்க வேண்டும் என்று கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர். மூன்று கூட்டத்திலும், கழகத் தோழர் நாத்திகன் பகுத்தறிவுப் பாடல்களை பாடி, கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர். பொதுமக்களிடம், துண்டறிக்கைகள் கொடுக்கப்பட்டன.

**இரண்டாம் நாள்:** மயிலாப்பூர் பகுதி சார்பாக, 22.04.2022 அன்று மாலை 5:30 மணிக்கு தேனாம் பேட்டை காந்தி நகர் பகுதியில் தொடங்கியது, தொடர்ந்து, மயிலாப்பூர் பல்லக்குமா நகர் தெரு, மந்தைவெளி சென்மேரிஸ் பாலம் ஆகிய மூன்று இடங்களில் தெருமுனைக் கூட்டங்கள் நடை பெற்றன.

தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், தலைமைக்குழு உறுப்பினர் அய்யனார், மாவட்ட செயலாளர் உமாபதி, சுகுமார், தமிழ்நாடு மாணவர் கழகம் தேன்மொழி, உதயா ஆகியோர் மக்களிடம் ‘திராவிட மாடல்’-அய் ஏன் ஆதரிக்க வேண்டும் என்று கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர்.

மூன்று கூட்டத்திலும், கழகத் தோழர் நாத்திகன் பகுத்தறிவுப் பாடல்களை பாடி, கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர். அதிர்வு பறைக்குழு பறையிசைத்தனர்.

**மூன்றாம் நாள்:** 23.04.2022 அன்று, வேளச்சேரியில் மாலை 5 மணி முதல் 06:30 வரையிலும், மடிப்பாக்கத்தில் மாலை 6:30 மணி முதல் இரவு 8 மணி வரையும், நங்கநல்லூரில் இரவு 8 முதல் 9:30 மணி வரையும் ஆகிய இடங்களில் நடைபெற்றன.

தலைமைக் குழு உறுப்பினர் கு.அன்புதனசேகர், மாவட்டச் செயலாளர் உமாபதி, எட்வின் பிரபாகரன், குகன் ஆகியோர் மக்களிடம் ’திராவிட மாடல்’ யை ஏன் ஆதரிக்க வேண்டும் என்று கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர்.

மூன்று கூட்டத்திலும், கழகத் தோழர் நாத்திகன் பகுத்தறிவுப் பாடல்களை பாடி, கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர். அதிர்வு பறைக்குழு பறை இசைத்தனர். மாநாட்டிற்கான நன்கொடையாக எட்வின் பிரபாகரன் ரூ.7500 மாவட்ட செயலாளரிடம் வழங்கினார்.

**கோவை :** இரண்டாம் நாளாக 24.4.2022 மாலை 6 மணிக்கு நல்லிசெட்டிபாளையத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சி தொடக்கமாக கழகப் பெயர் பலகையை இராஜலட்சுமி திறந்து வைக்க, மாவட்டத் தலைவர் பா.இராமச்சந்திரன் கழகக் கொடியினை ஏற்றி வைத்தார்.



கழகத் தோழர்கள் கிருஷ்ணன், புரட்சித் தமிழன், அமிலா ஆகியோர் பரப்புரை பாடல்களை பாட... தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர்கள் பிரசாந்த், மகிழவன் ஆகியோர் திராவிட மாடல் ஆட்சியில் மாணவர் நலன் குறித்து சிறு உரையாற்றினர். மாவட்ட கழகச் செயலாளர் யாழ்.வெள்ளிங்கிரி, ஒன்றிய பாஜக அரசின் மோசடிகள் குறித்தும் திராவிட ஆட்சியின் சாதனைகள் குறித்தும் விளக்கமாக உரையாற்றினார். இறுதியாக மாநில பொருளாளர் துரைசாமி நிறைவுரையாற்றினார்.

**அன்னூர் :** 24.04.2022 அன்று அன்னூர் பயணியர் மாளிகை முன்பு தெருமுனைக் கூட்டம் நடைபெற்றது. நிகழ்ச்சித் தொடக்கமாக கழகத் தோழர்கள் கிருஷ்ணன், புரட்சி தமிழன், அமிலா ஆகியோர் பரப்புரை பாடல்களை பாடினர். பின்னர் தோழர்கள் சபரிகிரி, நிர்மல் குமார், வெங்கட், பா.இராமசந்திரன் ஆகியோர் திராவிட மாடல் ஆட்சி குறித்து உரையாற்றினர். இறுதியாக மாவட்ட கழகச் செயலாளர் வெள்ளிங்கிரி, மாநில பொருளாளர் துரைசாமியும் விளக்கி உரையாற்றினர். இக் கூட்டத்தை அன்னூர் பகுதி தோழர்கள் விஷ்ணு, மோகன்குமார், பார்த்திபன், நந்தகுமார், மனோ ஆகியோர் ஏற்பாடு செய்தனர்.

**மேட்டுப்பாளையம் :** திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பாக 23.4.2022 மாலை “நமக்கான அடையாளம் திராவிட மாடல்” என்ற தலைப்பில் மேட்டுப்பாளையம் பகுதியில் உள்ள எல்லம்மாள் லாட்ஜ் அருகே இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

தோழர்கள் கிருஷ்ணன், புரட்சித் தமிழன் பாடல்களைப் பாடினர். தமிழ்நாடு மாணவர் கழகம் மகிழவன், சவுரிபாளையம் சிவராஜ் -திவிக, நிர்மல் -திவிக, சபாபதி (தமிழ் புலிகள் கட்சி) இறுதியாக வெள்ளிங்கிரி, கழகப் பொருளாளர் துரைசாமி ஆகியோர் உரையாற்றினார். பல்லடம் சரஸ்வதி நன்றி கூறி சிறப்பாக நிகழ்ச்சி முடிந்தது. கோவை மாவட்டத் தலைவர் மேட்டுப்பாளையம் இராமச்சந்திரன் ஏற்பாடு செய்திருந்தார்.

**ஈரோடு :** திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் மாநில உரிமைகளை பறிக்காதே, கல்வி உரிமையை தடுக்காதே, மதவெறியைத் திணிக்காதே, “நமக்கான அடையாளம் - திராவிட மாடல்” மண்டல மாநாடு விளக்க தெருமுனை கூட்டம் சத்தியமங்கலம் பேருந்து நிலையம் முன் நடைபெற்றது. மாநில வெளியீட்டு செயலாளர் இராம. இளங்கோவன் சிறப்புரை ஆற்றினார். காசிபாளையம் பகுதியில் நடைபெற்ற தெருமுனை கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர் கோபி வேலுசாமி உரையாற்றினார்.

**கழகத்தின் புதிய வெளியீடு (1)**

## ‘மோடி ஆட்சி இந்துக்களுக்கு என்ன செய்தது?’




*பரப்புரைப் பயணத்துக்கான 15 வெளியீடுகளில் ஒன்று “மோடி ஆட்சி இந்துக்களுக்கு என்ன செய்தது?” பெரியாரியவாதியும் ஊடக வியலாளருமான ர. பிரகாஷ் மிகச் சிறப்பாக ஏராளமான தகவல்கள் தரவுகளை தொகுத்து வழங்கியிருக்கிறார்.*

*பெட்ரோல், டீசல் விலை உயர்வில் மக்களை எப்படி ஏமாற்றுகிறார்கள்?*

*ஜி.எஸ்.டி. கொள்கையால் மாநிலங்கள் வருவாய் எப்படி சுரண்டப் படுகின்றன?*

*ஏர் இந்தியா, எல்.அய்.சி. பங்கு விற்பனைக்கு ஒன்றிய ஆட்சி கூறும் மக்களை ஏமாற்றும் போலி வாதங்கள் என்ன? அதில் உண்மை இருக்கிறதா?*

*பொதுத் துறை நிறுவனங்கள் ஏன் தனியாருக்கு தாரை வார்க்கப் படுகிறது? பயனடைவது யார்? எப்படி விதிமீறல்கள் நடக்கின்றன?*

*கார்ப்பரேட்டுகளுக்கு மக்கள் வரிப்பணம் கொட்டி அழப்படுவதோடு வங்கிகள் கடன்களை வாரி வாரிக் கொடுத்து வரும் அதிர்ச்சித் தகவல்கள்.*

*கார்ப்பரேட் சேவைகளுக்காக பா.ஜ.க.வுக்கு கிடைக்கும் பரிசுகள்; பரிவர்த்தனைகள் என்ன?*

*ஊழல் எதிர்ப்புக் கட்சியாக காட்டிக் கொள்ள விரும்பும் பா.ஜ.க.வின் போலி முகமூடியைக் கிழித்துக் காட்டும் ‘தேர்தல் பத்திரங்களின்’ கதை!*

*இப்படி ஏராளமான தகவல்களைத் திரட்டி, உங்கள் விரல் நுனியில் கொண்டு வந்து சேர்க்கிறது இந்த வெளியீடு.*

*நடப்பது ஏழை விளிம்பு நிலை “இந்து”க்களுக்கான ஆட்சியல்ல; பார்ப்பன-பனியா-பணக்கார இந்துக்களைக் கொழுக்க வைக்கும் ஆட்சி என்பதற்கு மறுக்க முடியாத ஆதாரங்கள்.*

*எவருடனும் நீங்கள் வாதாடலாம்; பேசலாம்; முகநூலில் பதிவிடலாம்; மேடைகளில் பேசலாம்; கருத்துகளைக் கூர் தீட்டிக் கொள்ளலாம்.*

*அவசியம் வாங்கிப் படிக்க வேண்டிய நூல். நீங்கள் மட்டும் வாங்கினால் போதாது; குறைந்தது 10 நூல்களை யாவது ஒவ்வொரு தோழரும் வாங்கிப் பரப்ப வேண்டும்.*

**32 பக்கங்கள்; விலை ரூ.30/- மட்டுமே.**

**- இது ஒரு ‘நிமிர்வோம்’ வெளியீடு**

**தலையங்கம்**

# மக்கள் உரிமைகளை முடக்கும் ‘மனுவாத’ ஆளுநர்கள்

‘படைப்புக் கடவுள்’ பிர்மா மனுசாஸ்திரத்தை உருவாக்கி, பிராமண- சத்ரிய - வைசிய - சூத்திரர்களுக்கு தகுதி, கடமைகளை வகுத்திருப்பதால் அதன்படி வாழ வேண்டியதே தர்மம் என்று பார்ப்பனியம் சமூகத்தில் வர்ணாஸ்ரமத்தைத் திணித்தது. இதில் மக்கள் முடிவு செய்ய எந்த உரிமையும் இல்லை. அதேபோல் ஒன்றிய சாம்ராஜ்ய ‘பிரம்மாக்களால்’ - ‘மனுசாஸ்திரம்’ முறையாகக் கடைபிடிக்கப்பட்டிருக்கிறதா என்பதைக் கண்காணிக்க மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட ஆளுநர்கள் என்ற ‘தேவ தூதர்கள்’ - கல்வி, மொழி, பண்பாடு உள்ளிட்ட அனைத்தையும் மக்களுக்காக அவர்களே தீர்மானிப்பார்கள். இதில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சிகளோ மக்களோ தலையிட முடியாது. தலையிட்டால் எருமை வாகனத்தின் மீது ‘சித்திரபுத்திரர்கள்’ விரைந்து வந்து “நரக”த்துக்கு அனுப்பி வைத்து விடுவார்கள் என மிரட்டுகிறார்கள். ‘மனுவாதிகள்’ இப்போதும் வேறு வடிவத்தில் ‘ராமராஜ்யம்’ நடத்துகிறார்கள்.

இந்த மிரட்டல்களுக்கு ‘திராவிட மாடல்’ பணியாது என்பது மட்டுமல்ல; திருப்பித் தாக்கும் என்று தமிழ்நாடு அரசு போர்ச் சங்கைக் கையில் எடுத்து விட்டது.

தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 13 பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்களை நியமிக்கும் அதிகாரங்களை மாநில ஆட்சியிடமிருந்து பறித்து ஆளுநரே நியமித்து வந்ததோடு பல்கலைக்கழகங்களை மனுதர்மக் கூடாரங்களாக மாற்றும் வேலைகளை தமிழக ஆளுநர்கள் தொடங்கியிருக்கிறார்கள். இந்த அத்துமீறல்களுக்கு கடிவாளம் போடும் வகையில் தமிழ்நாடு சட்டமன்றம் துணைவேந்தர்களை நியமிக்கும் அதிகாரங்களை மாநில அரசுக்கே வழங்கும் வகையில் பல்கலைக்கழக சட்டங்களில் திருத்தம் செய்து சட்டமன்றத்தில் மசோதா நிறைவேற்றி அடுத்த நாளே ஆளுநரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைத்துள்ளது. இந்த மசோதா சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பபட்ட நாள் மிகவும் முக்கியமானது. அதே நாளில் தமிழக ஆளுநர் துணைவேந்தர்கள் மாநாட்டை உதகையில் உள்ள ஆளுநர் மாளிகையில் கூட்டி, அவர்களுக்கு சில ஆர்.எஸ்.எஸ். புள்ளிகளைக் கொண்டு பயிற்சிக்கு ஏற்பாடு செய்திருந்தார். இணை வேந்தரான தமிழ்நாடு உயர்கல்வி அமைச்சர் பொன்முடிக்கு அழைப்பும் இல்லை; தகவலும் இல்லை. ‘சோஹோ கார்ப்பரேசன்’ என்ற தனியார் நிறுவன அதிகாரியான ஆர்.எஸ்.எஸ். மனுவாதி சிறீதர் வேம்பு என்பவர் பயிற்சி அளிக்க அழைக்கப்பட்டிருந்தார்.

தமிழ்நாட்டில் கடந்த காலங்களில் துணைவேந்தர்களை நியமிக்கும் அதிகாரம் மாநில அரசுகளிடமே இருந்தது. மாநில அரசு பரிந்துரைக்கும் நிபுணர் குழு தயாரித்த பட்டியலிலிருந்துதான் ஆளுநர் தமிழக அரசு பரிந்துரைத்த ஒருவரை சம்பிரதாயமாக அறிவிப்பார். பன்வாரிலால் புரோகித் ஆளுநராக வந்த பிறகு தான் தன்னிச்சையாக ஆளுநரை நியமிக்கத் தொடங்கினார். ‘இரட்டையர்களின்’ அ.இ.அ.தி.மு.க. ஆட்சி இந்த அதிகார அத்துமீறலை அடிபணிந்து ஏற்றுக் கொண்டது.

ஏற்கனவே ஜெயலலிதா முதல்வராக இருந்த 1995ஆம் ஆண்டில் ஆளுநராக இருந்த சென்னாரெட்டியிடமிருந்து பல்கலைக்கழக வேந்தர் எனும் பதவியைப் பறித்து அதை முதல்வருக்கு வழங்கும் சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றினார். ஆனால், ஆளுநர் மாளிகையில் அது கிடப்பில் போடப்பட்டது. இப்போது சட்டமன்றத்தில் உயர் கல்வித் துறை அமைச்சர் பொன்முடி தாக்கல் செய்த மசோதா குஜராத் பல்கலைக்கழகம் (1949); தெலுங்கானாவில் அனைத்துப் பல்கலைக் கழக சட்டம் (2000) ஆகியவற்றை சுட்டிக்காட்டுகிறது. இம்மாநிலங்களில் துணைவேந்தர்கள் நியமன உரிமை மாநில அரசுகளுக்கே உண்டு. ஆளுநர் ரவி துணைவேந்தர் நியமனத்தில் அத்துமீறலின் எல்லைக்கே சென்றார். எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக பா.ஜ.க. ஆசீர்வாதத்தோடு நியமிக்கப்பட்ட ஆன்மிகப் பேச்சாளர் சுதா சேஷய்யன் பதவிக்காலம் முடிவடைந்த நிலையில் புதிய துணைவேந்தர் நியமனத்துக்கு பரிந்துரைக்க ஆளுநரே ஒரு குழுவை நியமித்தார். மூவர் பெயரை குழு பரிந்துரைத்தது. அந்தப் பெயர்களை நிராகரித்த ஆளுநர் ரவி, பதவி ஓய்வு பெற்ற சுதாசேஷய்யனுக்கு மீண்டும் பதவி நீட்டிப்பு வழங்கி தன்னிச்சையாக முடிவு செய்தார். ‘பிராமணர்’களுக்கான சமூக ஆதிக்க உரிமைகளை ‘பிராமணர்’களே முடிவெடுக்க ‘மனுசாஸ்திரம்’ அதிகாரம் வழங்கியிருப்பது போலவே ஆளுநர் செயல்பட்டார்.

ஆளுநர் புரோகித் நியமித்த அண்ணா பல்கலை துணைவேந்தர் சூரப்பா மீது அடுக்கடுக்கான ஊழல் புகார் வந்த நிலையில் எடப்பாடி பழனிச்சாமி ஆட்சி ஊழல் விசாரணைக் குழுவை நியமித்தது. அதற்கு ஒத்துழைப்புத் தர, ஆளுநர் புரோகித் மறுத்தார். சூரப்பா டெல்லி அதிகார மய்ய செல்வாக்கைப் பயன்படுத்தி தமிழக அரசு ஊழல் குழு விசாரணையை முடக்கி வருகிறார். அண்ணா பல்கலையில் புதிய தொழில்நுட்ப பயிற்சிப் பிரிவுகளைத் தொடங்க மாநில அரசிடம் அனுமதி கேட்கத் தேவையில்லை என்று கூறி டெல்லியிடமே சென்று அதற்கான அனுமதியைப் பெற்று வந்தார். நிதி ஏற்பாடுகளைத் தானே ஏற்பாடு செய்து கொள்ள முடியும் என்று தமிழக அரசைப் புறக்கணித்தார். இவ்வளவுக்குப் பிறகும் அ.இ.அ.தி.மு.க. பா.ஜ.க.வோடு கைகோர்த்துக் கொண்டு அவர்களின் ‘புரட்சித் தலைவி’ கொள்கைக்கும் தமிழ்நாடு மக்களுக்கும் துரோகம் செய்து பா.ஜ.க.வுக்கு பக்க மேளம் வாசிப்பதை மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் ஆளுநரின் அடாவடிக்கு கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

> “எதேச்சாதிகாரத்தால் சாம்ராஜ்ஜியங்களைக் கட்டியெழுப்பலாம் என யாரும் நினைக்க வேண்டாம்! ‘வரலாறு என்பதே சாம்ராஜ்ஜியங்கள் சரிந்த கதை தான்’ என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இது மக்களாட்சி நடைபெறும் நாடு என்பதை ஒன்றிய பாஜக அரசு உணர வேண்டும்! மாநிலங்கள் இணைந்த ஒன்றியம் தான் இந்தியா என்பதை ஒன்றிய அரசில் இருப்பவர்களும், அவர்களின் ஏஜெண்டுகளாக செயல்படும் ஆளுநர்களும் உணர வேண்டும்!”

என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் விடுத்துள்ள எச்சரிக்கை தமிழ்நாட்டு மக்களின் ஒருமித்த உணர்வு.

தமிழ்நாடு அரசு மாநில உரிமைக்காக எடுக்கும் இந்த நடவடிக்கைகளைப் பாராட்டி வரவேற்க வேண்டும்.

# பிரெஞ்சுப் புரட்சியில் மரணிக்கப் போவோரின் பட்டியலை கசோட் கணித்தாரா?

**எட்வின் பிரபாகரன்**

**உச்ச நீதிமன்ற நீதிபதி இராம சுப்ரமணியம் போலி அறிவியல் வாதங்களுக்கு ஆணித்தர மறுப்பு (5)**

‘நிமிர்வோம்’ மாத இதழில் 2020 ஆம் ஆண்டில் வெளி வந்துள்ள கட்டுரையை அதன் முக்கியத்துவம் கருதி மீண்டும் வெளியிடுகிறோம்.

**புதிர் 8:** பிரேசில் நாட்டைச் சேர்ந்த அரிகோ என்ற விவசாயி, பல மருத்துவர்களால் குணப்படுத்த முடியாத நோய் களை குணப்படுத்தினார். துருப்பிடித்த கத்தியையும், கத்தரிக்கோலையும் வைத்தே அறுவை சிகிச்சை செய்தார். முறையாக மருத்துவம் படிக்காத இவரால் எப்படி அறுவை சிகிச்சை செய்ய முடிகிறது? என்ற கேள்விக்கு மருத்துவ உலகில் பதில் இல்லை.

**விடை:** முதலில் அரிகோ பல நோய் களை குணப்படுத்தியதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை. உலகப் புகழ் பெற்ற நாத்திக அறிஞர் ஜேம்ஸ் ரண்டி, 1982இல் இதை பற்றி “Film – Flam Psychics Especially Unicorns & other delusions” என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். மாயா ஜாலம் (தந்திரம்) செய்பவர்களின், மக்களை ஏமாற்றும் “கை சாதுரியத்தை” விளக்கும் படங்களை வெளியிட்டு, அதனை அரிகோவின் கை சாதுரியத்தோடு ஒப்பிட்டுக் காட்டியுள்ளார். முறையாக மருத்துவம் கற்காமல் வைத்தியம் பார்த்ததாலும், மருத்துவ உரிமம் இல்லாததாலும் இருமுறை சிறை சென்றவர் அரிகோ. இவருடைய பெரும்பாலான நோய் குணப்படுத்துதல் என்பது, இயேசு கிறிஸ்து பார்வையற்றவர்களுக்கு பார்வை அளித்ததைப் போன்ற கட்டுக் கதையே ஆகும்.

**புதிர் 9:** பிரஞ்சு புரட்சி நடைபெறுவதற்கு 4 ஆண்டுகளுக்கு முன்பு இளவரசர் கலந்து கொண்ட கேளிக்கை விருந்தில், ஜாகுயெஸ் கஸோட் என்பவர் ஆளும் வர்க்கத்தினர் ஒவ்வொருவரும் எப்படி கொல்லப்படுவார்கள் என்று துல்லியமாகக் கணித்தார். தற்கொலை செய்பவர்கள், எத்தனை முறை கத்தியால் கீறி இறப்பார்கள் என்பதுவரை கணித்தார். அவர் சொன்னதைப் போலவே, 1792இல் நடந்த புரட்சியில் ஆளும் வர்க்கத்தினர் பலர் கொல்லப்பட்டனர். எதிர்காலத்தில் நடக்கப் போவதை ஜாகுயெஸ் கஸோட் முன் கூட்டியே கணித்தது எப்படி என்பது புரியாத புதிராகவே உள்ளது.

**விடை:** நடிகர் ரஜினி காந்த், துக்ளக்கில் (1971) சோ, பெரியார் ராமன் சிலையை நிர்வாணமாக எடுத்துச் சென்றதாக துணிச்சலாக எழுதியுள்ளதாகக் கூறினார். ஆனால், ஆதாரம் எங்கே? என்று கேட்ட போது, 2017 இல் வெளியான ‘அவுட்லுக்’ இதழை காண்பித்தார். 1971இல் நடந்த சம்பவத்துக்கு 1971 துகளக்கை தானே ஆதாரமாகக் காட்டியிருக்க வேண்டும்? அதே போல, 1788இல் கஸோட் சொன்ன தீர்க்கதரிசனங்களுக்கு 1788இல் ஆதாரம் காட்டுவது தானே முறை யாகும்! ஆனால், கஸோட்டை தீர்க்கதரிசியாகக் காட்டுபவர்கள் 1805ஆம் ஆண்டு லவு ஹார்ப் என்பவர் தொகுத்த நூலையே சான்றாகக் காட்டுகின்றனர். எனவே, இத்தகைய கணிப்பு நடந்திருக்க வாய்ப்பே இல்லை. பிறரின் இறப்பை கணிக்கத் தெரிந்த கஸோட்டால், தன் இறப்பை கணிக்கத் தெரியவில்லை. அதே பிரஞ்சு புரட்சியில் அவரும் கொல்லப்பட்டார்.

(கட்டுரையாளர் கழக செயல்பாட்டாளர்)

(தொடரும்)

## வினா – விடை

- காஞ்சி குரு விஜயேந்திரனை விமர்சித்தவரை கைது செய்ய வேண்டும்.
  **– தமிழ்நாடு பிராமண சமாஜம்**

  கைது செய்வதோடு நிறுத்தக் கூடாது; விஜயேந்திரன் கொலை வழக்கில் எந்த சிறையில் இருந்தாரோ அதே அறையில் போட்டு பூட்ட வேண்டும்; அப்பத் தான் புத்தி வரும்.

- ஆன்மீகப் பயணம் முடிந்தது; அடுத்து அரசியல் பயணம் தொடங்குகிறேன்.
  **– சசிகலா**

  தொடக்க விழா - கொடநாடு ‘எஸ்டேட்டில்’; இரண்டாவது விழா - கருநாடகா நீதிமன்றத்தில்; தவறாது வருக!

- சி.பி.எஸ்.ஈ. பாடத்திட்டத்திலிருந்து முகலாயர் வரலாறு - ஜனநாயகம் பற்றிய பாடங்கள் நீக்கம்..
  **– செய்தி**

  அதுக்கு பதிலாக புல்டோசர் வைத்து இடிப்பது; ஜீப் ஏற்றி சாகடிப்பது போன்ற ‘அகிம்சை’ தத்துவங்களை சேர்க்கலாம்.

- நீதிமன்றத்தில் மாநில மொழியில் வழக்காட வேண்டும்; இல்லையேல் திருமண வீட்டில் மந்திரங்கள் ஓதுவதுபோல யாருக்கும் புரியாது.
  **– உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி**

  ‘ஆண்டி இந்தியன்’ எச்.ராஜா, எங்கே போயிட்டீங்க... இதுக்கு ‘ஹாட்டா’ ஒரு பதிலடி கொடுங்க...

- ‘முரசொலி’ பற்றிய அவதூறு பேச்சு வழக்கில் ஆஜராக விலக்கு கோரி அமைச்சர் முருகன் மனு.
  **– செய்தி**

  ஏன் மனு போடுறீங்க... வழக்கை அடுத்த தலைவர் அண்ணாமலை பெயருக்கு மாத்தச் சொல்லுங்க... பிரச்சினை ‘ஓவர்’.

- பிராமணர் என்பதாலோ - பாரம்பர்ய அர்ச்சகர் என்பதாலோ கோயில்களில் தனிச் சலுகை ஏதும் கிடையாது.
  **– அறநிலையத் துறை**

  இதுக்குப் பேருதான் சமுதாயப் புரட்சி!

# கியூட்-நீட்-கேட்: தகுதித் தேர்வுகளா? தடைக் கற்களா?

மு. இராமநாதன்

ஒரு புதிய நுழைவுத் தேர்வு வந்திருக்கிறது. கியூட் அதன் பெயர் (CUET - Central University Eligiblity Test). மத்திய பல்கலைக்கழகங்களுக்கான தகுதித் தேர்வு என்பது பொருள். இனிமேல் மத்திய பல்கலைக் கழக வளாகங்களுக்குள் மாணவர்கள் கால் பதிக்க வேண்டுமானால், இந்தத் தேர்வில் அவர்கள் கை நிறைய மதிப் பெண்கள் வாங்கி வைத்திருக்க வேண்டும்.

ஏற்கனவே மருத்துவக் கல்லூரியில் நுழைய நீட் தேர்வு நடந்துவருகிறது. இது தவிர கேட் என்றொரு நுழைவுத் தேர்வும் நடந்துவருகிறது; இது பொறி யியல் முதுநிலைப் படிப்பிற்கான தேர்வு என்பதால் பரவலாக அறியப்படவில்லை. ஏன் இப்படியான நுழைவுத் தேர்வுகள் நடத்தப் படுகின்றன?

ஒன்றிய அரசின் புதிய கல்விக் கொள்கை யானது பள்ளிக் கல்வி முடித்து கல்லூரிக்குப் போவதற்கு மாணவர்கள் நாடு தழுவிய நுழைவுத் தேர்வை எழுத வேண்டும் என்கிறது (பத்தி 4. 42, பக்கம் 19). அதாவது அடுத்தகட்டமாக இந்த நுழைவுத் தேர்வுகள் எல்லாக் கலை-அறிவியல் கல்லூரிகளுக்கும் நீட்டிக்கப்படும் சாத்தியம் இருக்கிறது. இந்தத் தேர்வுகள் கல்வியின் தரத்தை மேம்படுத்தும் என்கிறது ஒன்றிய அரசு. ஆனால், தமிழ்நாடு இந்தத் தேர்வுகளைத் தடைக்கற்களாகப் பார்க்கிறது, ஏன்?

**கியூட்டின் கதை :** கியூட்டில் தொடங்கு வோம். இந்தியாவில் 54 மத்திய பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன. இவை ஒன்றிய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் வரும். இவை கலை-அறிவியல் பாடங்களில் இளங்கலையும் முதுகலையும் கற்பிக்கின்றன; ஆய்வுப் படிப்பும் உண்டு. ஜவகர்லால் நேரு (ஜேஎன்யு), பனராஸ், அலிகார் முஸ்லிம், ஜாமியா மிலியா முதலான புகழ் பெற்ற கல்வி நிலையங்கள் மத்திய பல்கலைக் கழகங்கள்தாம்.

இவை அனைத்தும் இதுவரை +2 மதிப்பெண் களின் அடிப்படையிலும், கூடவே அவை நடத்தி வந்த நுழைவுத் தேர்வு அல்லது நேர்காணலின் அடிப்படையிலும் அனுமதி வழங்கிவந்தன. இனி அப்படிச் செய்ய முடியாது.

நாடு முழுதும் கியூட் தேர்வு நடக்கும். அந்த மதிப்பெண்களின் அடிப்படையில் மட்டுமே அனுமதி வழங்கப்படும். +2 பாடங்களில் 50% வாங்கி யிருந்தால் போதுமானது. தமிழகத்தில் இரண்டு (சென்னை, திருவாரூர்) மத்திய பல்கலைக்கழகங்கள் உள்ளன. புதுவையில் ஒன்று இருக்கிறது. தமிழக அரசு இந்த கியூட் தேர்வை எதிர்க்கிறது. வியப்பொன்றுமில்லை. நீட் (National Eligibility cum Entrance Test - NEET) தேர்வுக்கு எதிரான பல நியாயங்கள் கியூட் டுக்கும் பொருந்தும்.

**நீட்டின் கதை :** முதலாவதாக, தமிழக அரசும், அரசியலர்களும், கல்வியாளர்களும் மறுதலிக்கிற நீட் தேர்வை மாநிலத்தின் மீது திணிப்பது கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிரானது.

அடுத்ததாக, ஆங்கிலப் பயிற்றுமொழி வாயிலாக, நகர்ப்புறத்தில், பெரிய தனியார் பள்ளிகளில் படித்த, முக்கியமாகத் தனிப்பயிற்சி வகுப்புகளில் படிக்கும் வசதி படைத்த பிள்ளை களால்தான் நீட் தேர்வைத் தாண்டிக் குதிக்க முடிகிறது.

மூன்றாவதாக, பள்ளித் தேர்வுகளை ஒட்டு மொத்தமாகப் புறக்கணித்துவிட்டு நாடு முழுதும் ஒரே நாளில் ஒற்றைத் தேர்வு நடத்தும் முறை உலகில் வேறு எந்த நாட்டிலும் இல்லை. மேலைநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பள்ளி இறுதித் தேர்வு, நுழைவுத் தேர்வு, இவற்றுடன் விளையாட்டு, ஓவியம், கலை, சமூகப்பணி போன்ற துறைகளில் இருக்கும் ஈடுபாடு, கட்டுரை எழுதும் திறன் முதலான பல அம்சங்கள் கணக்கில் கொள்ளப்படும்.

இப்படியான சர்வதேச நடைமுறைகளுக்கு மாறானது நீட். அது நுழைவுத் தேர்வு எனும் ஒற்றைச் சாளரத்தின் வழியாக மட்டுமே பிள்ளைகளை அனுமதிக்கிறது. அது நமது சமூகத்திற்குப் பொருத்த மானதாக இல்லை. இதற்கு சரஸ்வதி ஓர் எடுத்துக் காட்டு.

சரஸ்வதி எனது நண்பனின் மகள், நன்றாகப் படிப்பாள். நண்பனுக்கு எர்ணாகுளம் மாவட்டத்தில் ஒரு சிற்றூர். அவள் டாக்டராக வேண்டும் என்பது அவளது கனவு. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அவளது +2 முடிவுகள் வந்தன. அவளது படம் மலையாள நாளிதழ் களில் வெளியாகியது. அவள் மாவட்ட அளவில் அதிக மதிப்பெண்கள் வாங்கி யிருந்தாள். அதைப் பார்ப்பதற்கு நண்பன் இல்லை. அவனைப் புற்றுநோய் கொண்டு போயிருந்தது. 2012க்கு முன்பாக இருந்திருந்தால் அவள் சுலபமாக மருத்துவக் கல்லூரிக்குள் நுழைந் திருப்பாள். இப்போது நீட் எழுத வேண்டும். எழுதினாள். தேற முடியவில்லை. அப்பாவின் கனவை நிறைவேற்ற ஓராண்டு தனிப் பயிற்சி வகுப்புக்கும் போனாள். அப்படியும் முடிய வில்லை. கடந்த ஆண்டு சித்த மருத்துவப் படிப்பில் சேர்ந்துவிட்டாள்.

நன்றாகப் படிக்கக் கூடிய கிராமப்புறப் பிள்ளை களுக்கு நீட் தேர்வில் வெற்றி பெறுவது சவாலாக இருக்கிறது. ஏன்? நீட் தேர்வில் கொள் குறிக் கேள்விகள் (Objective Questions) மட்டுமே இருக்கும். ஒவ்வொரு கேள்விக்குக் கீழும் நான்கு பதில்கள் இருக்கும். பதில்கள் ஒன்றுக்கொன்று நெருக்கமாகவும் இருக்கும். அவற்றிலிருந்து சரியான ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இதற்குக் கேள்வியில் பொதிந் திருக்கும் சூதும் தந்திரமும் புரிய வேண்டும். பன்னிரண்டு ஆண்டுகள் நீண்ட பத்திகள் வாயிலாகவும் வரைபடங்களின் வாயிலாகவும், கணக்குகள் வாயிலாகவும் பதிலளிப்பதில் பயிற்சி பெற்ற பிள்ளைகளுக்கு இந்தக் கொள் குறிக் கேள்விகளில் இருக்கும் கண்ணாமூச்சி புரிபடுவதில்லை.

**கேட்டின் கதை :** நீட் போலவே கேட் (Graduate Aptitude Test for Engineers- GATE) தேர்வுகளும் கொள் குறிக்கேள்விகளால் ஆனவை. பொறியியல் முதுநிலைப் படிப்பிற்கு இந்த கேட் வழியாகத்தான் நுழைய முடியும்.

கேட் தொடர்பான எனது அனுபவ மொன்றைப் பகிர்ந்துகொள்வது இந்த இடத்தில் பொருத்தமாக இருக்கும். சில ஆண்டுகளுக்கு முன்பு கோவையில் ஓர் அறியப்பட்ட பொறி யியல் கல்லூரியில் நடந்த கருத்தரங்கிற்குப் போயிருந்தேன். கல்லூரியில் முதுநிலை பொறி யியல் படித்துக் கொண்டிருந்த மாணவர்களும் பங்கேற்றனர். பேராளர் பட்டியலில் அவர்களது பெயர்களும் இருந்தன. அந்த மாணவர்களில் சரிபாதி ஆந்திரர்கள். அவர்களது பெயர்களி லிருந்து அது புலனாகியது.

கருத்தரங்கை ஒருங்கிணைத்தவர் எனது ஒரு சாலை மாணவர். அவரிடம் காரணம் கேட்டேன். அவர் சொன்னார்: 'தமிழகத்தைப் போலவே ஆந்திராவிலும் பல சிறிய சுயநிதிப் பொறியியல் கல்லூரிகள் உள்ளன. அவற்றுக்கு எந்தச் சந்தை மதிப்பும் இல்லை. இந்த மாணவர்கள் தங்கள் இளநிலைப் படிப்பின் கடைசி இரண்டாண்டுகள் கேட் தனிப்பயிற்சி வகுப்புகளுக்குப் போவார்கள். இளநிலைப் படிப்பில் தேர்ச்சி பெற்றால் (மட்டும்) போது மானது. கேட் மதிப்பெண் மூலம் பெரிய பொறி யியல் கல்லூரிகளின் முதுநிலைப் படிப்பில் இடம்பிடிப்பார்கள். முதுநிலை முடித்ததும் இந்தக் கல்லூரிகளின் மதிப்பை வேலை வாய்ப்புச் சந்தையில் பயன்படுத்திக் கொள் வார்கள்' என்று முடித்தார். இது கேட்டின் கதை.

கியூட் தேர்விலும் கொள்குறிக் கேள்விகள் மட்டுமே இருக்கும். இது மாதிரியான கேள்வி களில் உள்ள இன்னொரு பிரச்சினை, இவை மாணவர்களின் எழுதும் திறனுக்கு மதிப்பளிப் பதில்லை.

மருத்துவர்களும் பொறியாளர்களும்கூட தங்கள் தொழிலில் நிறைய எழுத வேண்டும். அதிலும் கலை, அறிவியல் துறைகளில் எழுதும் பேசும் முக்கிய மானது. எழுதுவதற்கு முதலில் தகுதியான சொற்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அந்தச் சொல்லை வெல்ல பிறிதொரு சொல் இருக்கலாகாது என்கிறார் வள்ளுவர். இப்படியான சொற்களைக் கோர்த்துப் பொருள் பொதிந்த வாக்கியங்களும், வாக்கியங்களை இணைத்துத் தர்க்கரீதியிலான பத்திகளும் எழுத வேண்டும். ஆகவே, கொள்குறிக் கேள்விகளின் அடிப்படையில் மட்டும் கலை-அறிவியல் கல்லூரிகளுக்கும் அனுமதி வழங்குவது ஆபத்தானது.

**மீண்டும் நீட்டின் கதை :** நீட் தேர்வில் இன்னும் இரண்டு பிரச்சினைகள் இருக்கின்றன.

முதலாவது, கட்டணங்களில் இருக்கும் படி நிலைகள். அரசு மருத்துவக் கல்லூரிகளில் ஆண்டுக் கட்டணம் ரூ.13,610. சுயநிதிக் கல்லூரி களில் அரசு இடங்களும் மேனேஜ்மெண்ட் இடங்களும் ஏகதேசம் சம அளவில் இருக்கும். இதில் அரசு இடங்களுக்கான ஆண்டுக் கட்டணம் சுமார் ரூ.4 லட்சம். மேனேஜ்மெண்ட் இடங்களுக்கான கட்டணம் இதைப் போல் மூன்று முதல் ஐந்து மடங்கு இருக்கும். இதைத் தவிர சுயநிதிக் கல்லூரி களில் வெளிநாட்டு இந்தியர்களுக்கான இடங்கள் 15% வரை இருக்கும். ஓர் உள்நாட்டு மாணவர் இரவோ டிரவாக ஓர் அயல்நாட்டு இந்தியரின் ஆதரவுக் கடிதத்தை வழங்கினால், அடுத்த நாள் அவரும் வெளிநாட்டு இந்தியராக மாறி விடலாம். இந்த இடங்களுக்கான ஆண்டுக் கட்டணம் ரூ.45 முதல் ரூ.60 லட்சம் வரை இருக்கும் என்கின்றனர். ஆகவே தகுதியை நிலைநிறுத்துவதாகச் சொல் லப்படும் நீட் தேர்வுகள் அதிதமான கட்டணம் செலுத்தக் கூடியவர்களுக்கு இடம் அளிக்கிறது.

இரண்டாவதாக, இந்த நீட் சகாப்தத்தில் உருவாகும் மருத்துவர்களின் சமூக அக்கறை குறித்தும் ஆர்வலர்கள் கேள்வி எழுப்புகிறார்கள். மருத்துவம் படிக்கிற மாணவர்கள் அரசு மருத்துவமனைகளில் பயிற்சி பெறுவார்கள். பலதரப்பட்ட நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பதனால், அவர்கள் மீது கரிசனமும் உணர்ச்சிகளைச் சமநிலையில் பேணுகிற ஆற்றலும் உருவாகும். ஆனால் இனிமேல் மருத்துவமனைப் பயிற்சி முக்கியத்துவம் இழக்கும். மருத்துவப் படிப்பு முடிந்ததும் நெக்ஸ்ட் எனப்படும் போட்டித் தேர்வு வரப் போகிறது. அதில் தேறினால் தான் பட்டம் கிடைக்கும். அடுத்து, முதுகலை மருத்துவப் படிப்புக்கான பிஜி-நீட் தேர்வுக்கான தயாரிப்புகளைத் தொடங்க வேண்டும்.

இப்படித் தேர்வுகளைத் துரத்திக் கொண் டிருக்கும் மாணவர்களில் எத்தனை பேரால் கரிசனமிக்க மருத்துவர்களாக முடியும்? இப்படிப் பணத்தை வாரி இறைக்கும் மாணவர் களில் எத்தனை பேர் சிற்றூர்களிலும் சிறு நகரங்களிலும் பணியாற்றுவார்கள்? 2015-க்கும் 2017-க்கும் இடைப்பட்ட காலத்தில் மருத்துவப் பட்டம் பெற்றவர்களில் 40% பேர் வெளிநாடு களுக்குப் போய்விட்டார்கள் என்கிறது ஓர் ஆய்வு (தி வீக், 17.8.2019).

சமூகத்தில் சிறந்து விளங்கும் மருத்துவரோ, பொறியாளரோ, ஆசிரியரோ, அறிவிய லாளரோ அதிக மதிப்பெண் பெற்றவர் களாகவே இருப்பதில்லை. அதற்கு மாணவர்கள் சமூக அக்கறை மிக்கவர்களாக வளர வேண்டும். இந்த நுழைவுத் தேர்வுகள் அதற்கு உதவுவ தில்லை. மாறாக அந்த நோக்கத்திற்கு எதிராகவும் இயங்குகிறது.

இந்திய அளவில் கல்வியில் சிறந்த மாநிலம் தமிழ்நாடு. இங்கே உயர்நிலைப் பள்ளியில் தேறியவர்களில் சரி பாதிப் பேர் கல்லூரிக்குப் போகிறார்கள். இந்தியாவின் பல மாநிலங்கள் இந்த நிலையை எட்ட இன்னும் பல தசாப்தங்கள் ஆகக்கூடும்.

தனக்கான கல்லூரி அனுமதி நடைமுறை களைப் பல்லாண்டு காலப் பயன்பாட்டின் வழியாகக் கண்டடைந்தது தமிழகம். ஓர் அதி காலைப் பொழுதில் ஒன்றிய அரசு ஆட்டத்தைக் கலைத்து விட்டு நாடு முழுமைக்கும் ஒரே நுழைவுத் தேர்வைக் கொண்டு வருகிறது. இந்த நுழைவுத் தேர்வுகள் பிள்ளைகள் பள்ளித் தேர்வில் ஈட்டிய மதிப் பெண்களை நிராகரிக் கின்றன; செல்வமும் செல்வாக்கும் உள்ளவர் களுக்குச் சாதகமாக இருக்கின்றன.

இந்தத் தேர்வு முறை எழுதும் கலைக்குரிய மதிப்பை வழங்குவதில்லை. இதன் வழிமுறைகள் சமூக அக்கறை உள்ளவர்களை உருவாக்க உதவு வதில்லை. ஆகவே ஒன்றிய அரசு தனது நுழைவுத் தேர்வுகளை விலக்கிக் கொள்ள வேண்டும். கல்லூரிகளில் மாணவர்களை அனுமதிக்கிற பொறுப்பை முன்பு போலவே மாநில அரசு களின் பொறுப்பில் விட்டுவிட வேண்டும்.

– அருஞ்சொல்

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

‘நிமிர்வோம்’ புதிய வெளியீடுகள்

# வாங்குவீர் - படிப்பீர் - பரப்புவீர்

நமக்கான அடையாளம் “திராவிட மாடல்” எனும் முழக்கத்தோடு கழகம் நடத்தும் 400 தெருமுனைக் கூட்டங்கள், 11 மண்டல மாநாடுகளில் பொது மக்களிடம் பரப்ப கழகத்தின் வெளியீடுகள்....

1) பறிக்கப்பட்ட மாநில உரிமைகள்(விடுதலை இராசேந்திரன்) - ரூ. 100
2) மோடி ஆட்சி ‘இந்து’க்களுக்கு என்ன செய்தது? (ர.பிரகாசு) - ரூ. 30
3) 50 ஆண்டுகால திராவிட ஆட்சியில் தமிழ்நாடு (ஜெயரஞ்சன்) - ரூ. 30
4) மக்களை குழப்பும் ‘போலி அறிவியல்’(எட்வின் பிரபாகரன்) -ரூ. 60
5) தில்லை தீட்சதர்கள் - முறைகேடுகள் - ரூ. 30
6) பெரியார் சந்தித்த அடக்குமுறைகள்(விடுதலை இராசேந்திரன்) - ரூ. 60
7) திராவிடர் இயக்கத்தின் சுருக்கமான வரலாறு (1912 முதல் 1973 வரை) - ரூ. 60
8) கீழ் வெண்மணியும் பெரியாரும் - ரூ. 60
9) வேத மரபின் சூழ்ச்சிகள் - ரூ. 80
10) இவர்தான் பெரியார் - ரூ. 40
11) கருஞ்சட்டைக் கலைஞர் - ரூ. 50
12) இளைஞர்களே உங்களுக்குத் தெரியுமா ? - ரூ. 30
13) விஞ்ஞானிகளை கொன்றொழித்த மதவெறி - ரூ. 40
14) பேய் - பில்லி - சூனியம் உண்மையா ? - ரூ. 40

**புத்தகங்கள் தேவைப்படுவோர் தொடர்பு கொள்ள வேண்டிய அலைபேசி எண்கள் :**

73736 84049 - 86673 23494

# ‘இந்து’ விளிம்பு நிலை மக்களை நசுக்கும் பாரதிய ‘புல்டோசர்’ கட்சி

இராம நவமி விழாக்களில் கலவரம் விளைவித்தார்கள் என்று சிறுபான்மை மக்களின் வீடுகள், கடைகள், வழிபாட்டுத் தலங்களை பாரதிய ஜனதா கட்சியின் ஆட்சியினர் புல்டோசரை வைத்து தகர்த்து வருகின்றனர். புது டெல்லியிலும், மத்தியப் பிரதேசத்திலும், குஜராத்திலும் இந்த புல்டோசர் தாக்குதல்கள் நிகழ்ந்துள்ளன. உச்ச நீதிமன்றம் அதிர்ச்சியடைந்து தானாக முன் வந்து இந்த வழக்கை எடுத்து ‘உடனடியாக இந்த புல்டோசர் தாக்குதல்களை நிறுத்த வேண்டும்’ என்று உத்தரவிட்டிருக்கிறது. உச்சநீதிமன்றத்தின் தடை வந்தப் பிறகும் கூட புல்டோசர் தாக்குதல்கள் தொடர்ந்தன, அதற்கு கடும் எதிர்ப்புகள் வந்து கொண்டு இருக்கின்றன. **பாரதிய ஜனதா கட்சி தற்போது “பாரதிய புல்டோசர் கட்சி”யாக உரு மாறியிருக்கிறது.**

சிறுபான்மை மக்களுக்கு எதிராக புல்டோசரை வைத்து வீடுகளை இடிக்கிறார்கள், அதே சமயம் பெரும்பான்மை இந்துக்களுக்குத் தான் நாங்கள் கட்சி நடத்துகிறோம் என்று கூறிக்கொள்ளும் இவர்கள், பெரும்பான்மையான இந்துக்களின் வாழ்வாதாரத்தை புல்டோசரை வைத்து தகர்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஜி.எஸ்.டி வரி மேலும் 143 பொருட்களுக்கு உயர்த்தப்படுவதாக செய்திகள் வருகின்றன. ஆடைகள், அணிகலன்கள், சேவிங், ரேசர்கள், கை கடிகாரங்கள், பற்பசை, சேவிங் திரவியங்கள், சாக்லேட்டுகள், கோகோ பவுடர்கள் என்று அன்றாடம் மக்கள் பயன்படுத்தும் பொருட்களுக்கு 28% (maximum tax) வரி விதிப்பதாக செய்திகள் வந்திருக்கின்றன. இதனால் பாதிக்கப்பட போகின்றவர்களெல்லாம் யார்? நிச்சயமாக நடுத்தர ஏழை எளிய இந்துக்கள் தான்.

மற்றொன்று, மருந்து விலையைக் கூட்டுவதற்கு ஒன்றிய ஆட்சி இப்போது தனியார் மருந்து உற்பத்தி நிறுவனங்களுக்கு அனுமதி அளித்திருக்கிறது. மருந்துக் கம்பெனிகள் தங்களுடைய மருத்துவ உபகரணங்களுக்கு 107% விலையை, ஏப்ரல் 1 ஆம் தேதியிலிருந்து உயர்த்திக் கொள்ளலாம் என்று ஒன்றிய ஆட்சி அனுமதி அளித்திருப்பதால் இரத்த அழுத்தம், சர்க்கரை, வைட்டமின், ஓ.ஆர்.எஸ், பாரசிட்டமால் உள்ளிட்ட 800 வகையான மருந்துகளின் விலை கடுமையாக உயரப்போகிறது.

இவைகளினாலும் பாதிக்கப்படப்போவது யார்? நடுத்தர ஏழை எளிய இந்துக்கள் தான்.

இன்னொரு பக்கம், முகேஷ் கௌதம் அதானி, உலகத்தின் முதல் 10 பணக்காரர்களில் 5 ஆவது இடத்திற்கு முன்னேறி இருப்பதாகவும் செய்திகள் வந்திருக்கின்றன. மோடியின் மிக நெருக்கமான நண்பரான அவர், குஜராத்தை சேர்ந்தவர். இந்தியாவின் பல முக்கியமான தொழில்களில் முதலீடு செய்து, 235 மில்லியன் டாலர் சொத்து மதிப்பைக் கடந்த ஓராண்டில் மட்டும் உயர்த்தியிருக்கிறார். அதுமட்டுமின்றி கடந்த 8 ஆண்டில் மோடி ஆட்சிக்கு வந்த பிறகு, பெட்ரோலியப் பொருட்களின் வரியை உயர்த்தி, விலை உயர்வால் மட்டும், வெகு இந்து மக்களிடம் கொள்ளையடித்த பணம் 26 இலட்சம் கோடி.

புல்டோசர் இடிப்பு இஸ்லாமியர்களுக்கு மட்டுமல்ல. வெகு இந்து மக்களின் வாழ்வியலை பொருளாதாரத்தால், ஜி.எஸ்.டி வரி விதிப்பால், பெட்ரோலிய பொருட்களின் விலை உயர்வால் இந்துக்களையும் நசுக்கிக் கொண்டு, மதவாதம் என்ற முகமூடி அணிந்து கொண்டு, பார்ப்பன, பணியாக்களின் நலனுக்காக ஏழை எளிய விளிம்பு நிலை இந்துக்களை பலிகொடுத்து வரக்கூடிய ஒரு ஆட்சிதான் இன்றைக்கு இந்துக்களின் காவலராக தன்னை காட்டிக் கொண்டு வலம் வந்து கொண்டிருக்கிறது.

கழகத் தலைவர் கொளத்தூர்மணி தலைமையில்

# பீமாராவ் - சந்தியாராணி இணையேற்பு விழா




24-04-2022 ஞாயிறு மாலை 4.00 மணியளவில் பெங்களூர் ஹோட்டல் கேபிடல் அரங்கில் தாமரை வேணி - ஜார்ஜ் இணையரின் மகன் பீமாராவ் க்கும் மங்கம்மா-புஷ்பராஜ் இணையரின் மகள் சந்தியாராணிக்கும் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் இணையேற்பு விழா நடைபெற்றது.

மணவிழா மேடையில் பெரியார், அம்பேத்கர் படங்கள் சுயமரியாதைத் திருமணம் என்ற எழுத்துகளோடு வைக்கப்பட்டிருந்தது. நிகழ்வின் தொடக்கத்தில் நிமிர்வு கலையகத் தோழர்களின் பறையிசை எழுச்சியோடு முழங்கியது.

சிறப்பு அழைப்பாளர்களாக பெங்களூர் பல்கலைக் கழகப் பேராசிரியர் முனைவர் சமதா தேஷ்மானே, ஒடுக்கப்பட்டோர் கூட்டமைப்பின் மாநிலத் தலைவர் ஜிகானி சங்கர், மனநல மருத்துவரும் சமூக செயல்பாட்டாளருமான டாக்டர் பத்மாக்ஷி லோகேஷ், முனியஜினப்பா, லோகேஷ் சந்திரா ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்திப் பேசினர்.

முனைவர் சமதா தேஷ்மானே பேசும்போது, தான் தாலியில்லாத சடங்கில்லாத திருமணத்தை 25 ஆண்டுகளுக்கு முன்னர் நடத்திக் கொண்டு நலமாக வளமாக வாழ்ந்து வருவதை எடுத்துக்கூறி, வேத, புராண, சாத்திர புரட்டுகளை விரிவாக எடுத்துரைத்தார்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையேற்று உரையாற்றிய பின்னர் உறுதி மொழி கூறச்செய்து சுயமரியாதை இணையேற்பு விழாவை நடத்தி வைத்தார். மணமகனும் மணமகனின் தந்தையும் கருப்பு உடையில் இருந்தனர்; இது தாலி இல்லா திருமணமும் கூட.

கற்பி ஒன்றுசேர் அமைப்பு நாக ரத்னா நிகழ்வை தொகுத்து வழங்கியதோடு, நன்றியுரையும் ஆற்றினார்.

தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் சிவகாமி, கழக தலைமைக் குழு உறுப்பினர் சூலூர் பன்னீர் செல்வம் - தமிழ்ச்செல்வி, திருப்பூர் மாவட்டக் கழகத் தலைவர் முகில்ராசு, மாநகரத் தலைவர் தனபால், தோழர்கள் திலகவதி மோகன் மற்றும் தோழர்கள் பழனி, சித்தார்த்தன், தயாளன், சரவணன் உள்ளிட்ட பெங்களூர் திராவிடர் விடுதலைக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்றிருந்தனர்.

நிகழ்வின் சிறப்பாக மணமகனின் தந்தையாரும், கற்பி, ஒன்று சேர் அமைப்பின் தலைவருமான ஜார்ஜ் நடத்திவரும் ஆதரவற்றோர் இல்லத்தில் இருந்து முதிய பெண்கள் இருவர் சிறப்பு அழைப்பாளர்களாக அழைக்கப்பட்டு இணையர்களுக்கான மாலைகளை அவர்களின் கைகளால் எடுத்துக் கொடுத்து இணையேற்பு விழாவை துவக்கி வைத்தனர்.

# வங்கதேச டாக்காவில் மனிதநேயர் ஃபாரூக் நினைவு குருதிக்கொடை முகாம்




22.04.2022 அன்று காலை 9:30 மணி முதல் 1:00 மணி வரை டாக்கா தமிழ்ச் சங்கம் மற்றும் செம்பிறை சங்கம் இணைந்து ஃபாரூக் நினைவாக குருதிக் கொடை முகாமை நடத்தின.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 28th April 2022

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN